வெற்றி வேற்கை

I.**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுத்து:**

1. வெற்றி வேற்கை பாடலை எழுதியவர் _____

   அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்

   இ) அதிவீரராம பாண்டியன் ஈ) பாரதியார்

2. கருணை உடையவர் என்னும் பொருளை உணர்த்தும் சொல் _____

   அ) அண்ணல் ஆ) புரவி இ) தண்ணீர் ஈ) இயம்

3. இப்பழம் என்ன விலை – சரியான நிறுத்தக் குறியைத் தேர்ந்தெடு.

   அ) . ஆ) , இ)? ஈ) !

4. (,) இப்புள்ளியின் பெயர் _____

   அ) காற்புள்ளி ஆ) அரைப்புள்ளி

   இ) முக்காற்புள்ளி ஈ) முற்றுப்புள்ளி

5. வண்ணம் இச்சொல்லுக்குப் பொருத்தமான ஒத்தஓசை உடைய சொல் _____

   அ) நுண்ணியரே ஆ) தண்ணீர் இ) கிண்ணம் ஈ) மன்னர்

6. சேகர் வேகமாக ஓடினான் _____ பந்தயத்தில் வெற்றி பெற்றான்.

   அ) அப்படியானால் ஆ) மற்றும் இ) ஆனால் ஈ) அதனால்

7. இரண்டு தொடர்களை இணைக்கப் பயன்படுத்தும் சொல் _____

   அ) எதிர்ச்சொல் ஆ) இணைப்புச் சொல்

   இ) பெயர்ச்சொல் ஈ) வினைச்சொல்

8. வளைந்து ஓடுவதும் அதுவே; எண்ணின் பெயரும் அதுவே _____

   அ) நரி ஆ) பாம்பு இ) எட்டு ஈ) ஆறு

9. | | | |
|---|---|---|
| கு | | |
| ரு | | |
| | ற | கு |

   இங்கு இரண்டு இடங்களிலும் விடுபட்ட ஒரே எழுத்து ___

   அ) தி ஆ) கி இ) வி ஈ) டு

10. விதை, விடை, _____

அ) வடை ஆ) விளை இ) பனை ஈ) பாதை